# தோமஸ் ஹொப்ஸின் நீதி பற்றிய எண்ணக்கரு

Journal of Social Review
Volume 2 (1)
June 2014
Department of
Social Sciences

*ஏ.எல்.எம்.றியால், ஐ.எல்.எம். மாஹிர்*

## ஆய்வுச் சுருக்கம்

*அரசியல் மெய்யியலின் பிரதானவகிபாகம் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட சமூகத்துக்குரிய சாத்தியமான ஏற்பாடுகள் என்ன என்பதை அறிய முயற்சிப்பதாகும். அரசியல் மெய்யியலாளர்கள் அவர்களுடைய காலத்தினை அடிப்படையாகக் கொண்ட எடுகோள்களையும் அறிவையும் கொண்டு நீண்டகால அரசியல் பிரச்சனைகளுக்கு சாத்தியமான விடையளிக்கமுற்பட்டனர். தோமஸ் ஹொப்ஸின் பாரம்பரியதாராண்மைவாதம் பற்றிய கருத்துக்களில் மனித இனத்தைஎவ்வாறு கருதுகின்றார் என்பதையும் ஒருமனிதன் இன்னொரு மனிதனுடன் தொடர்புபடுகின்றானா என்பதையும் புரிந்துகொள்ள இவ்வாய்வு முற்படுகின்றது. இத்தொடர்பினூடாக மனிதர்களிடையே நீதிநிலவுகின்றதா? என்பதை இவ்வாய்வு மூலம் அறியமுடியும். இங்கு பயன்படுத்தப்போகும் முதல் நிலை மூலாதாரம் ஹொப்ஸின் ''லெவியதான்'' டுநஎயைவாயெ ஆகும். நீதியைப் பற்றி அறியவும் பல்வேறு சிந்தனையாளர்கள் இதை எவ்வாறு நோக்குகின்றார்கள் என அறியவும் சில இரண்டாம் நிலை மூலாதாரங்களைப் பயன்படுத்தி உள்ளேன். இவ்வாய்வு மெய்யியலுக்கும் அரசியல் மெய்யியலுக்கும் என வரையறுக்கப்பட்டுள்ளதால் நீதியினுடைய ஏனைய பகுதிகளை புரிந்துகொள்ளவது இவ்வாய்வின் நோக்கமல்ல. இங்கு பயன்படுத்தப்படும் முறைகளாக பகுப்பாய்வு, ஒப்பீட்டுமுறை என்பனவாகும். நீதியின் அர்த்தம், இயல்பு என்பவற்றையும் மெய்யியலிலுள்ள அதற்கான பிரத்தியேக அர்த்தத்தையும் பரிசீலனையும் இவ்வாய்வில் காணமுடியும்.*

## அறிமுகம்

மனிதர்கள் யாவரும் சமமானவர்கள். மனிதர்களில் ஏழை, பணக்காரன், பலமிக்கவன், நுண்ணறிவுள்ளவன், அறியாமை நிறைந்தவன் எனப் பலவகை உண்டு. இவை தவிர நாம் இங்கே குறிப்பிட்டுக் கூறமுடியாத இன்னும் எத்தனையோ வேறுபாடுகள் மனிதர்களிடையே காணப்படுகின்றன. இத்தகைய வேறுபாடுகள் இன்றும் மனிதர்களிடையேயும் பல்வேறு மனிதக் குழுக்களிடையேயும் நிலவும் குழப்பங்களுக்கு காரணமாகின்றன. ஒரே பண்பைக் கொண்டிருப்பவர்கள் அவர்களில் இருந்தும் வேறுபட்டோருக்கு எதிர்ப்பாக இருக்கின்றனர். பலமானவர்கள் பலவீனமானவர்களை தங்கள் விருப்பங்களை பின்பற்றும்படி வற்புறுத்துகின்றனர். அவர்கள் பணியாதவிடத்து அங்கு குழப்பம் ஏற்படுகின்றது. இவ்வேறுபாடு யுத்த நிலைக்கு இட்டுச் செல்கின்றது. நாம் இங்கு கூறுவதை உண்மையென நிரூபிக்க, மக்களை ஒருவருக்கு ஒருவர் கொன்று குவித்துக் கொண்டிருக்கும் சோமாலியா, ருவாண்டா, பு&ண்டி போன்ற நாடுகளை எடுத்துக் காட்டாகக் கூறலாம். இவ்வாறு மனிதன் ஒருவனுக்கொருவன் எதிராகக் காணப்படும் யுத்த நிலையில் நாம் எவ்வாறு நீதியைப் பற்றி பேச முடியும்.

மேற்குறிப்பிட்ட பிரச்சினையே என்னை ஹொப்ஸின் நீதி பற்றிய எண்ணக்கரு தொடர்பான ஒரு ஆய்வை மேற்கொள்ளத் தூண்டியது. ஹொப்ஸ் மனித இனத்தை எவ்வாறு கருதுகின்றார் என்பதையும் ஒரு மனிதன் இன்னொரு மனிதனுடன் தொடர்புபடுகின்றானா என்பதையும்

புரிந்து கொள்ள இவ்வாய்வு முற்படுகின்றது. இத்தொடர்பி னூடாக மனிதர்களிடையே நீதி நிலவு கின்றதா? இல்லையா? என்பதை இவ்வாய்வு மூலம் அறிய முடியும். இங்கு பயன்படுத்தப் போகும் முதல் நிலை மூலாதாரம் ஹொப் ஸின் "லெவியதான்" *Leviathan* ஆகும். நீதியைப் பற்றி அறியவும் பல்வேறு சிந்தனையாளர்கள் இதை எவ்வாறு நோக்கு கின்றார்கள் என அறியவும் சில இரண்டாம் நிலை மூலாதாரங்களை பயன்படுத்த உள்ளேன்.

இவ்வாய்வு மெய்யியலுக்கும் அரசியல் மெய்யியலுக்கும் என வரையறுக்கப்பட் டுள்ளது. நீதியினுடைய ஏனைய பகுதி களை புரிந்து

கொள்ளவது இவ்வாய்வின் நோக்கமல்ல. இங்கு பயன்படுத்தப்போகும் முறைகளாக பகுப்பாய்வு முறை, ஒப்பீட்டு முறை என்பன காணப்படுகின்றன.

இவ்வாய்வு, மூன்று பிரதான பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. முதல் பகுதி, ஹொப் ஸின் மனிதன் பற்றிய எண்ணக்கரு தொடர் பாக உள்ளது. இங்கு நாம் மனிதனின் இயல் பையும் ஹொப்ஸைப் பொறுத்தவரையில் மனிதன் எவ்வாறு அரசுடன் தொடர்புறு கின்றான் என்பதையும் பரிசோதிக்க முடியும். இரண்டாம் பகுதியில் நீதியின் அர்த்தம், இயல்பு என்பவற்றையும் மெய்யியலிலுள்ள அதற்கான பிரத்தியேக அர்த்தத்தையும் பரிசீலனை செய்ய முடியும். ஹொப்ஸின் நீதி தொடர்பான எண்ணக்கருவின் சாதக பாதகங்கள் பற்றிய சொந்த மதிப்பிட்டை மூன்றாம் பகுதியில் காண முடியும்.

## ஹொப்ஸின் மனிதன் தொடர்பான எண்ணக்கரு

### *ஹொப்ஸின் வாழ்க்கைப் வரலாற்றுப் பின்னணி*

தோமஸ் ஹொப்ஸின் 1588 – 1679 காலத்தில் வாழ்ந்தவர் பிறப்பிடம் இங்கி லாந்து. இவர் 14 வயதாக இருக்கும் போது ஒஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் இணைந்து சென்நெறி இலக்கியம் **(classical literature)** கற்றார். மேலும் அளவையியலும் கற்றார். எனினும் பல்கலைக்கழகத்தில் அவர் அரிஸ்ரோட்டிலின் அளவையியலில் ஆர்வமற்ற வராக இருந்த போதும், தனது கற்கையின் இறுதியில் நன்றாக செயற்பட்டார்.

ஹொப்ஸ், பல பிரதேசங்களுக்குப் பயணித்து அக்காலத்தைய பல்வேறு சிந்தனையாளர் களையும் சந்தித்தார். இத்தாலியில் கலிலியோ, பிரான்சில் டேக்கார்ட் போன்றோரை சந்தித்து நட்பை ஏற்படுத்திக்கொண்டார். இங்கிலாந் துக்குத் திரும்பிய போது பிரான்சிஸ் பேகன் னை சந்தித்து தொடர்பை ஏற்படுத்தினார். ஹொப்ஸினது தூசிடைட்டிஸ் **(Thuajdides)** மொழிபெயர்ப்பானது மக்கள் தாங்கள் பெற்ற துன்பங்களான உள்நாட்டு யுத்தம், அதனைத் தொடர்ந்த பலி, தனிமை, பொருட்களின் தேவை போன்றவற்றை உணரவைக்க அவர் எடுத்த முயற்சிகளில் ஒன்றாகும்.

யூக்லிட்லின் நுரஉடனைந மூலகங்களில் இருந்து கணிதத்தின் சரிநுட்பமான தன்மை யைக் கண்டறிந்ததன் பின் ஹொப்ஸ் தன் ஆர்வத்தை வரலாற்றில் இருந்து கணிதத்தின் பக்கம் நகர்த்தினார். "ஹொப்ஸின் மெய்யிய லில் கணிதம் பாரியளவு செல்வாக்குச் செலுத்தியது ஹொப்ஸ் அக்காலப்பகுதிக் குரிய தார்ப்பரியத்தை புரிந்து கொண்டார். 16ம், 17ம் நூற்றாண்டுகளின் அறிவு சார்ந்த சூழலானது, பல அடிப்படையான தீவிர மாற் றங்களால் நிறைந்துள்ளது. கொப்பனிக்கஸ் (1473 - 1543) புவியே அகிலத்தின் மையம் என வாதிட்டார். ஏனைய கிரகங்களின் அசைவு பற்றிய நீண்ட கால அவதானிப்பின் பின்னரும் சூரியனைச் சூழ பூமியின் கணக்கிட்டு முடிவுகளின் பின்னரே அவர் இந்த முடிவுக்கு வந்தார். இவ்வாறு கொப்பனிக்கஸால் கண்டுபிடிக்கப்பட்டது பிற்காலத்தில் கெப்லர்இ கலிலியோ ஆகியோரிலும் செல்வாக்குச் செலுத்தியதோடு வானியல் மற்றும் விஞ்ஞானத்தின் அபிவிருத்திக்கு இட்டுச் சென்றது.

இந்த விஞ்ஞானிகள் கொண்டிருந்த கருத்து ஒருமைப்பாடு "யாரேனும் ஒருவர் கொண்டி ருக்கக் கூடிய பொருட்களின் இயல்பு பற்றிய

அறிவை உரிய முறையில் தனது வேலையில் முயற்சியில் பாவித்தல் பற்றிய நம்பிக்கை ஆகும். ஹொப்ஸ் இந்த விஞ்ஞானிகள் குழுவோடு இணைந்து தனது கற்கையில் கேத்திர கணிதத்தையும் பிரயோகித்தார். ஹொப்ஸ் தனது இவ் வனுகுமுறையை பௌதீக இயல்பு, மனிதனின் இயல்பு மற்றும் மனித சமூகத்தின் இயல்பு போன்ற பல்வேறு கற்கைகளிலும் அறிவியலில் பல வடிவங்களிலும் வகைப்படுத்தினார்.

தன் வாழ்நாளில் ஹொப்ஸ் பல வெளியீடுகளை எழுதினார். 1640ல் சட்ட மூலங்கள் இயற்கை அரசியல் **"The Elements of Laws Natural Politics" 1642 ; De Cive (The Citizen)** என்பவற்றை வெளியிட்டார். 1645 ல் **De Corpone(Concernias the body)** ஐ எழுதினார். 1658 ல் **De Homine (Concerniny man)** ஐ வெளியிட்டார். பின்பு பிரான்சில் தனது பிரபல்யமான **Leviathan** ஐ எழுதினார். இவரது புத்தகங்களான **De Homine, Leviathan** என்பன கீழ்ப்படிவுக்கான இலக்கணத்துக் குரிய புத்தகங்களாக பாவிக்கப்படுகின்றன.

ஹொப்ஸின் அரசியல் மெய்யியலே அவரை பிரபலமாக்கியது. இங்கு அவர் அதிகமாக அளவையியலையும் விஞ்ஞான முறைகளையும் பாவித்தார். இவரது அரசியல் மெய்யியலில் இவர், புதிய நாட்டுக்கும் தனிப்பட்ட பிரஜைகளுக்கும் உள்ள தொடர்பை விளக்க முயற்சித்தார். அரசருக்கும் தனிப்பட்ட பிரஜைகளுக்கும் உள்ள தொடர்பு பற்றிய இவரது விளக்கமானது, மிகவும் அருமையானதும் இது பல மக்களை இவரது அரசியல் கொள்கைகள் பற்றி விமர்சிக்கவும் வழிவகுத்தது.

ஹொப்ஸ் இவ்வாறு அரசருக்கும் தனிப்பட்ட பிரஜைக்கும் உள்ள கடுமையான தொடர்பு பற்றி எழுதத் தூண்டியது அக்காலத்தில் இங்கிலாந்தில் காணப்பட்ட கடுமையான அரசியல் நிலவரமேயாகும். இங்கிலாந்தின் அரசியல் ஸ்தீரமற்றநிலை, நீதி ஊழல் போன்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து இவ்விரண்டு பிரதான பிரச்சினைகளும் ஹொப்ஸை அவரது தனித்துவமான அரசியல் கடமைப்பாடு தொடர்பான விதியை உருவாக்க தூண்டியது. இந்த அரசியல் ஸ்தீரத்தன்மை இன்மையானது தான் அதிக அதிகாரமுடையவராக இருப்பதற்காக தன் மக்களை மற்றவர்களுடன் சண்டையிட தயார்படுத்திய சில தலைவர்களால் ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறான அக்கிரம அனுபவமே மனிதனுக்கும் அரசியல் விடயங்களுக்கும் இடையேயான உடன்பாடின்மையை தோன்றச் செய்தது. இவ்விரு பிரச்சினைகளையும் கருத்திற் கொண்டு ஹொப்ஸ், மனித இயல்பு தொடர்பான மனித நடத்தைகள் அசையும் உடல்கள் வடிவில் இலகுவாக விளக்கப்படலாம் என்று கருதினார்[1]

ஹொப்ஸ் 1679ல் இறந்தார். அவரது வாழ்நாளில் அவர் தத்துவவியலுக்கும் பெரும் பங்காற்றியுள்ளார். இவர் மனித இயல்பு பற்றிய கற்கைக்கு விஞ்ஞான முறைகளைப் பிரயோகித்த முதலாமவர் ஆவார். 84 வயதில் ஹொப்ஸ் தன் சுயசரிதையை லத்தீன் மொழியில் வெளியிட்டார். 86 வயதில் **RIliad oelyssey** என்பதன் மொழி பெயர்ப்பை வெளியிட்டார். ஹொப்ஸ் அவரது மரணத்தின் பின் ஓர் ஆங்கில நிலையமாக ஈலியட் காணப்பட்டனர்.

ஹொப்ஸ் இடைப்பட்ட காலத்துக்குரிய இயற்கை விதியின் புரிந்துணர்விலிருந்து அரசின் அதிகார எண்ணக்கருவுக்கு விலகினார்.

## மனித இயல்பு

ஹொப்ஸ் மனிதனை இயற்கையாக, மற்றொருவரிலிருந்து சுதந்திரமாக வாழத்தக்க ஒரு தனி நபராக கருதுகிறார். மனிதன் தனி நபராகையால் ஒவ்வொரு மனிதனும் அற்ற மனிதனுக்கு இயற்கையின் நிலையால் அஞ்சுகிறான். இந்த அச்சம் மனிதனை மற்ற மனிதனுடன் சண்டையிடும் நிலைக்கு இட்டுச் செல்கின்றது. இயற்கையில் மனிதனுக்கு உந்து சக்தியாக இருப்பது தப்பிப் பிழைக்க வேண்டுமென்பதும் ,அத்தோடு அஞ்சுகின்ற மக்களுக்கு மரணம் பற்றி விசேடமாக கொரூரமான மரணம் பற்றிய பயம் இருந்தது.

[1] Stumpf, *Philosophy*, 239

"இயற்கையாக மனிதர்கள் சமமானவர்கள்.[2]" இயற்கை, மனிதனை உடலிலும் உள்ளத்திலும் சமனாக ஆக்கியுள்ளது". பலத்திலுள்ள வேறுபாடுகள் குறைக்கப்படலாம். பலவீனமானவர்கள் பலமானவர்களை வெல்ல போதியளவு பலத்தைப் பெறலாம். இங்கு பேசப்படும் சமனான புத்தி என்பது அறிவைக் குறிக்கின்றதே தவிர விஞ்ஞான கலைத்துறையில் உள்ள அறிவையல்ல. இயற்கையாக மனிதர்கள் யாவரும் சமமாக உள்ள நிலையில் அவர்கள் எல்லோருக்கும் தமது வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவற்றைப் பெற உரிமை உண்டு.

இங்கு கற்பிக்கப்படும் சமம் என்பது "எவரும் தமது அயலவரை நோவினை செய்தாவது தனது சுய பாதுகாப்புக்கு தேவையான எதையும் பெற முடியும்"[3] என்பதைக் குறிக்கின்றது. இயற்கையாக இந்த உரிமை எல்லா மனிதனுக்கும் காணப்படுகின்றது. இங்கு இவ்விடத்தில் உரிமை என்பது எப்படியாவது ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமாக அவன் விரும்பிய எதையும் செய்து அவன் பெறக் கூடியவற்றைப் பெற்று அனுபவிக்க முடியும் எனக் குறிப்பிடுகின்றது.

மனித இயல்பைப் பொறுத்தவரையில் நாம் குழப்பங்களுக்கான மூன்று பிரதான காரணிகளைக் கண்டறிகின்றோம்.

முதலாவது போட்டி - எதையேனும் பெற்றுக் கொண்டாக வேண்டும் என்ற நோக்கோடோ அல்லது தன்னை மற்றவர்களைவிட உயர்த்த வேண்டும் என்பதற்காகவோ மனிதன் போட்டியிடுகிறான். தற்போது மனிதன் போட்டியிடும் போது ஒவ்வொருவரும் மற்றவரை தோற்கடிக்க முயற்சிப்பதோடு எவரும் தோற்கடிக்கப்படுவதை ஏற்றுக் கொள்வதுமில்லை. இதன் விளைவாக ஒருவருக்கொருவர் வாய்த் தகராறு புரியும் நிலையை அடைகிறார்கள்.

இரண்டாவது நம்பிக்கையின்மை - இயற்கையின் அமைப்பில் எந்த தனி நபரும் மற்றவரை நம்புவதில்லை. "யாராயினும் இருவர் ஒரே விடயத்தை விரும்புவர்களேயானால் இருவரும் அதை அனுபவிக்க முடியாதவிடத்து அவர்கள் எதிரிகள் ஆகின்றனர்."[4] இவ்விடயத்தில் மக்கள் ஒருவரை ஒருவர் நம்பாமல் இருப்பதனால் எதிரிகளாகின்றனர். ஒவ்வொரு மனிதனும் தனது சக மனிதனுக்கு எதிரியாக இருந்தால் நம்பிக்கையின்மை மனிதனின் பாதுகாப்புக்காக ஒரு ஆயுதமோ மக்கள் தன் எதிரிகளிடமிருந்து தன் செல்வங்களையும் தன் குடும்பத்தையும் பாதுகாப்பதற்காக இதன் மீது தங்கியுள்ளான்.

மூன்றாவது பெருமை - பெருமை எப்போதும் அடையாளத்துக்காகவல்ல. மனிதன் வெற்றிகரமாக எதனையும் செய்கையில் அவன் பெருமைப்படுத்தப்பட அல்லது மற்றவர்களால் அடையாளம் காணபதற்காகயோகும். மனிதன் ஏதாவது கருத்துக்களை முன்வைக்கும் போது அவன் தன் நண்பர்களால் உதவி செய்யப்படல் வேண்டும். மக்கள் பல்வேறு விதமான தரக்குறைவான கருத்துக்களை வெளியிடும் போது அது குழப்பத்துக்கு இட்டுச் செல்கின்றது.

"சிவில் அரசுக்கு வெளியே எப்போதுமே ஒருவருக்கொருவர் எதிரான போர் காணப்படுகின்றது."[5] ஒருத்தருக்கொருத்தர் எதிரான இப்போரின் விளைவாக ஒவ்வொரு மனிதனும் இன்னொருவருக்கு எதிரியாக ஆகின்றான். இயற்கை எப்போதும் மனிதனை மற்ற மனிதனை ஆக்கிரமித்து அழிக்க உந்துகின்றது. இப்பூமியில் உள்ள எந்தவொரு மனிதனும் மற்றொரு மனிதனின் தலையீட்டை நம்ப மாட்டான். தற்போதைய நவீன சமூகங்களை கருதினால் மனிதன் ஏன் உறுதியான கதவுகளை தயாரிக்கிறான்? பயங்கரமான நாய்களை ஏன் வைத்திருக்கிறான்? நன்றாக வாழ்பவர்கள் ஏன் மற்றவர்களை பாதுகாப்புக் கடமையில் அமர்த்துகிறார்கள்? ஏன் தங்கள் வாயிற் கதவுகளை மின்னூட்டுகிறார்கள்? இவையெல்லாம் மனிதர் ஒருவருக்கொருவர் எதிரி என்பதை தெளிவுபடுத்துகின்றன.

[2] Thomas Hobbes, *Leviathan*, ed. by Michael Oakeshott (London: Collier-Macmillan Ltd., 1959), 100. Hereafter, Hobbes, *Leviathan.*

[3] Stumpf, *Philosophy,* 243.

[4] Hobbes, *Leviathan,* 99.

[5] Hobbes, *Leviathan,* 100.

இங்கு ஒவ்வொரு மனிதனும் மற்றவருக் கெதிராகவே நடக்கிறான். ஒரு மனிதன் ஒரு வேலையை செய்கையில் மற்றவன் அதை எதிர்மறையாகக் கருதுகிறான். ஏனெனில் எந்தவொரு மனிதனும் மற்ற மனிதனை நம்புவதில்லை. எல்லா மனிதர்களது செயற்பாடுகளும் தங்கள் சொந்த பாதுகாப் பிற்காகவே ஆகும். இவை தங்களது சுய பலத்திலும் திறன்களிலும் தங்கியுள்ளன. மனிதன் எது செய்வானாயினும் அது அவனது பாதுகாப்பிற்காகவே ஆகும். “மனிதனில் உந்து சக்தியாக காணப்படுவது தப்பி வாழ வேண்டுமென்ற விருப்பமும் உள ரீதியாக ஊடுருவிக் காணப்படும் பயம், மரணபயம், விசேடமாக கொடூரமான மரணத் தின் பயம் என்பனவாகும்.”[6] யுத்த நிலையில் அபிவிருத்திக்கான நோக்கில் எதுவுமே செய்யப்படுவதில்லை. ஆகவே ஒவ்வொரு வரும் தான் தப்பி வாழ அத்தியாவசியமான வற்றை பெறுவதற்காகவே செயற்படு கிறார்கள். அத்தோடு உற்பத்தியும் நிச்சயம் அற்றதாக உள்ளது. ஆகையால் மனித வாழ்க்கையானது முற்றுமுழுதாக ஏழ்மை யான அருவருக்கத்தக்கதாகவும் ஆயுட் காலம் மிகவும் குறுகியதாகவும் காணப்படு கின்றது.

ஹொப்ஸைப் பொறுத்தமட்டில் மனிதன் பல ஆசைகளையும் கட்டுக்கடங்கா உணர்ச்சிக ளையும் கொண்டுள்ளான். உதாரணமாக, சுதந்திரமாய் இருக்க தன் எதிரிகளை அடக் குதல் போன்றனவாகும். இயற்கையில் எந்த வொரு ஆசையோ அல்லது உணர்ச்சியோ உள்ளார்ந்த ரீதியில் கெட்டதில்லை அல்லது தப்பானதில்லை. ஆகவே மக்களை தப்பான வற்றை செய்யத் தடுக்கும் நல்லவற்றை செய்ய கட்டளையிடும் எந்தவொரு கட்டமும் இல்லை. அவர்களில் இந்த ஆசைகளை, உணர்ச்சிகளைப் பின் தொடர்ந்து வரும் செயற்பாடுகளும் தவறானவை அல்ல. நான் என் வாழ்க்கையின் சுய பாதுகாப்புக்காக எனது சக மனிதனை கொல்ல தீர்மானிக்கும் போது அது நல்லதாக உள்ளது. அதாவது என்னை அப்படிப்பட்ட காரியத்தை செய்யத் தடுக்கும் எந்தவொரு சட்டமும் இல்லை. மேலும் இயற்கையில் நல்லவை கெட்ட வற்றுக்கிடையில் எந்தவொரு வேறுபாடும் இல்லை. சரி, பிழை என்ற எண்ணப் போக்குக்கு இங்கு இடமில்லை. இவ்வாறு அவர்களை கட்டாயப்படுத்தத்தக்க ஒரு சட்டம் இல்லாமல் இருக்கையில் எவ்வாறு ஒரு மனிதன் இவற்றைக் கருத்திற் கொள்ள முடியும். “இத்தகைய போரில் எதுவுமே அநீதியில்லை.”[7]

இயற்கையில் மனிதன் தன் சுய பாதுகாப் புக்கும் சமாதானத்துக்கும் முக்கியமான இயற்கை விதிகளை அறிந்துள்ளான். மனிதன் தன் உணர்ச்சியில் சமாதானத்தின் பக்கம் திரும்பி அல்லது சாயக்கூடியவனாக உள் ளான். இவ்வாறு மனிதன் சமாதானத்தை நோக்கி திரும்புகின்ற உணர்வானது மரண பயமும் தப்பி வாழ்வதற்கான ஆசையுமாகும். ஆனால் இவ் இயற்கை விதி இயற்கை உணர் வுகளுக்கு முரண்பாடான சுய பாதுகாப்பு நோக்கமுள்ள இயற்கை உணர்வுகளுக்கு முரண்பாடான ஒரு காரண கட்டளையாகும்.

## மனிதனும் அரசும்

ஹொப்ஸைப் பொறுத்த மட்டில் மனிதன் காட்டில் ஒருவருக்கொருவர் எதிர்ப்பான யுத்த நிலையில் வாழ்ந்தான் இப்போர் மனிதர்களுக் கிடையில் காட்டில் பயத்தை உண்டாக்கியது. மனிதன் மரணத்தை விசேடமாக கொடூரமான மரணத்தை அஞ்சினான். இப்பயத்தால் தங்களை ஆளுகின்ற உரிமையை அரசன் என அழைக்கும் ஒருவரிடம் கையளிக்க தீர்மானித்தான். அவர்களிடம் தங்கள் உரிமையை கைவிட்ட தனி நபர்கள் ஆட்சிக்கு கட்டுப்பட்ட சுதந்திரமற்றவர்கள் என அழைக் கப்படுவர். அரசன் தன் சுய விருப்பத்தையோ அல்லது தன் மக்களது விருப்பத்தையோ பிரதிநிதித்துவப்படுத்த முடியும். இவ்வாறு இயற்கை போர் நிலையில் இருந்து சமூக மானது தனிநபர்கள் தங்கள் உரிமையை அரசனிடம் கையளித்ததன் பிற்பாடே தோன் றியது.

மனித சமூகத்தின் பூர்வீகம் காடாகும். காட்டில் ஒவ்வொரு மனிதனும் இன்னொருவருக்கு எதிரான போரில் இருந்தான். காட்டிலுள்ள எல்லாவற்றிற்கும் எல்லோரும் சம உரிமை உடையவர்களாக இருந்தனர். இவ்வாறான

[6] Stumpf, *Philosophy,* 245.

[7] Hobbes, *Leviathan*, 101.

இயற்கை நிலையில் மற்றவர்களை மதிக்க வேண்டும் என்ற கடமைப்பாடு மனிதனுக்கு இருக்கவில்லை. எது நல்லது, கெட்டது என்ற ஒழுக்க வேறுபாடு இருக்கவில்லை. காட்டில் தனது தப்புகையில் இருந்து தன் சுய பாதுகாப்புக்காக பின்பற்றிய இயற்கை விதியை மனிதன் கண்டறிந்தான். இயற்கை விதி ஒரு நீதிக்கட்டளை அல்லது பொது வான விதி, சட்டம் காரணங்களால் கண்ட றியப்பட்டது, இதனால் "மனிதன் தன் வாழ்க் கைக்கு அழிவை ஏற்படுத்தக் கூடியதை செய்யத் தடுக்கப்பட்ட அல்லது அவ்வாறான வழிகளை எடுக்க, அத்தோடு அவற்றை நீக்க இதனைக் கொண்டு அவன் சிந்தித்து நன்கு பாதுகாக்கப்படக்கூடியதாகும்."[8] நான் தப்பி வாழவேண்டுமானால் உதாரணமாக நான் இயற்கை விதியிலிருந்து எனக்கு தப்பி வாழ வேண்டுமானால் உதாரணமாக நான் இயற்கை விதியிலிருந்து எனக்கு தப்பி வாழ உதவக்கூடிய சட்டங்களை ஊகித்துணர முடியும். முதலாவதும் அடிப்படையானது மான இயற்கையின் விதி "சமாதானத்தை தேடுதலும் அதனைப் பின்பற்றுதலும்"[9] இச்சட்டத்தில் இருந்து நமக்கு தெளிவாவது சமாதானத்தை தேடுவது இயற்கையானது. இது எனது தப்புக்கான அடிப்படை நிபந் தனையாகும். ஆகவே நான் சமாதானத் துக்கான நிபந்தனைகளை உருவாக்கு மிடத்து எனக்கு தப்பி வாழ்வதற்கான பல சந்தர்ப்பங்கள் அமையும். தப்பி வாழ்வ தற்கான மனோ ஆசை என்னை சமாதா னத்தை தேட கட்டாயப்படுத்துகிறது. ஹொப் ஸைப் பொறுத்தளவில் இயற்கையின் இரண்டாம் விதி "சமாதானத்தைப் போல ஒருவன் அத்தியாவசியமென நினைக்கக் கூடிய தனது பாதுகாப்புப் பற்றி மற்ற மனி தர்கள் விரும்பும் போது ஒரு மனிதன் தானும் விரும்பகிறான். இந்த உரிமையை எல்லா வற்றிற்கும் விதிக்கிறான். மற்ற மனிதர்களுக் கெதிரான அதிகளவான சுதந்திரத்தோடு நிறைவடைவதோடு மற்ற மனிதர்களையும் அவனுக்கெதிராக அனுமதிக்கக்கூடும்"[10].

மனிதனுக்கு காட்டில் எல்லாவற்றிற்கும் உரிமை உண்டு. இது அங்கு எந்த ஒரு கடமைப்பாடும் இல்லை என்பதால் அல்ல. ஏனெனில் "மனிதன் தன்னடக்கமுடைய ஆட்சிக்கு ஒத்திசைந்து போகக்கூடிய, மற்ற வர்கள் தன்னை மற்றவர்களுக்கு இரையாக்கக் கூடிய வேளையிலும் இடத்திலும் தன் வாக் குறுதிகளை பேணக்கூடியவனாக இருப்பது போர் நிலையில் வாழக்கூடிய மனிதரின் வெளிப்பாடு கட்டுப்பாடற்ற நிலை என்பதை ஹொப்ஸ் அறிந்திருந்தார்."[11] ஏனெனில் நாம் ஏற்கனவே பார்த்தது போல ஒவ்வொருவரும் மற்றவனுக்கு எதிர்ப்பாக உள்ளான். இவ் வாறான நிலைமையை தவிர்க்க ஒவ்வொரு தனி நபரும் தன் சொந்த உரிமைகள் சிலவற்றைத் துறந்து சமாதானத்தை தேடுவதற் காக இயற்கை விதியின் ஆணைகளைப் பின்பற்ற வேண்டும்.

சமூக ஒப்பந்தம் என்பது மனிதன் இயற்கை நிலையை தவிர்த்து கூடி வாழும் இயல்புடைய சமூகத்தை அடைகின்ற உடன்பாடு ஆகும். இயற்கையில் மனிதன் தன் சுய பாதுகாப்பை தேடி மிகவும் சுறுசுறுப்பாக இருக்கின்றன ஆனாலும் இயற்கை போர் நிலைமைகளில் அவர்களால் நோக்கத்தை அடைய முடிவ தில்லை. இயற்கை விதிகளை பின்பற்ற தூண்டும் உந்து சக்திகள் இல்லாமல் இயற்கை விதியால் மட்டும் இவ்விலக்கை தனியே அடைய முடியாது இந்நிலைமையைப் பார்த்து மனிதன் தனது எல்லா பலத்தையும் அதிகாரத்தையும் ஒரு மனிதன் அல்லது ஒரு மனிதர் குழுவிடம் கொடுக்க தீர்மானித்தான். இவ்வாறு எல்லோரும் தங்கள் உரிமைகளை விட்டுக்கொடுக்கின்ற நபர் "அவரது சொல், செயல் என்பன அவருக்கேயுரிய அல்லது இன்னொருவரை பிரதிபலிக்கின்ற, இன்னொரு விடயத்தில் இயல்புகள் கொண்ட ஒருவர் ஆவார்."[12] ஒருவரது சொல், செயல் என்பன அவரது சுயமானதாக இருப்பின் அவர் ஒரு "இயற்கை நபர்."[13] ஆனால் அவரது சொல், செயல் இன்னொருவரது விருப்பங்களை பிரதிபலிப்பதாக இருந்தால் அவர் ஒரு "செயற்கை நபர்."[14]

---

8 Hobbes, *Leviathan*, 103.

9 Hobbes, *Leviathan*, 104.

10 Hobbes, *Leviathan*, 104.

11 Stumpf, *Philosophy*, 245.

12 Hobbes, *Leviathan,* 147.

13 Fredrick Copleston, *A History of Philosophy* vol. V: *Hobbes to Hume* (Westminster, Maryland: The Newman Press, 1961), 39. Hereafter, Copleston, *Philosophy.*

14 Copleston, *Philosophy*, 39.

சமூக ஒப்பந்தம் எவ்வாறு இடம் பெறுகிறது? போர் நிலையில் காணப்படும் ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொருவரிடமும் "நான் அதி காரம் வழங்குவது என்னை ஆளுவதற் கான உரிமையை இந்நபரிடம் அல்லது இந்நபர் கள் குழுவிடம் விட்டுக் கொடுக்கிறேன் என தனிப்பட்ட நபர்கள் கூறும் உடன்படிக்கை யின் மூலம் சமூக ஒப்பந்தம் நிகழ்கிறது."[15] இது வெற்றிகரமாக நிகழ்கின்ற போது மனிதன் பொதுநலனில் நுழைகிறான்.

மூன்றாம் விதி "மனிதர்கள் தங்கள் வாக்குறுதிகளை செயற்படுத்தட்டும்.Ӗ[16] இதுவே நீதியின் அடிப்படையாகும். ஆகவே ஒவ்வொருவரும் தான் நுழைந்த ஒப்பந் தத்தை பேணுவதில் ஈடுபட வேண்டும். ஹொப்ஸின் நீதியின் சாராம்சம் கீழ்படிவ தாகும். சட்டம் தவறானதாக இருக்கலாம் ஆனால் அநீதியான சட்டம் இல்லை என்பது ஹொப்ஸின் கருத்தாகும். அரசன் ஒரு தவறான சட்டத்தை கட்டளையிடும் போது மக்கள் அதனை அவ்வாறு தீர்ப்பளிக்கவோ அல்லது அதனை நோக்கி கீழ்ப்படியா மையைக் காட்டவோ உரிமை கிடையாது. இவ்வாறு அரசனால் கட்டளையிடப்படுவதை மக்கள் நிராகரிக்கும் போது அங்கு ஒரு வருக்கொருவர் எதிர்ப்பான போர் நிலை தோன்றுகிறது.

பொதுநலனில் மக்கள் அரசனைக் கொண்டிருப்பதில்லை. பொது நலனின் சாராம்சம் என்னவென்றால் பொது நலனி லுள்ள மக்களின் பரஸ்பர கூட்டு ஒப்பந்தத் தின் ஊடாக தனிநபர்களின் பல்வேறு செயல் களை பிரதிபலிக்கும் ஒருவர் இருப்பார். இது யுத்த நிலையில் காணப்படும் ஒவ்வொரு வரையும் பொதுநலவாயத்தை தொடங்குப வராக ஆக்குகின்றது. மற்றவர்களை பிரதி நிதித்துவப்படுத்துபவர் அரசன் என்றும் மற்ற வர்கள் ஆட்சிக்கு உட்பட்ட மக்கள் எனவும் அழைக்கப்படுகின்றனர். பொதுநலவாயத்தின் உருவாக்கத்திற்கான அண்ணளவான காரணம் தனிநபர்களுக்கிடையில் மேற் கொள்ளப்பட்ட கூட்டு உடன்படிக்கைகள் ஆகும். இந்த தனி நபர்கள் கூட்டு உடன்படிக் கையின் ஒரு அங்கமாக இருக்கின்றார்கள். அரச பதவியானது இக் கூட்டுடன்படிக்கையில் இருந்து வந்ததாக இருந்தபோதிலும் அரசன் இதன் ஒரு அங்கமாக இருப்பதில்லை. கூட்டு உடன்படிக்கையின் அங்கமாக இருப்பவர்களது பாதுகாப்புக்கள் என்ற ஒரு விசேட நோக்கத் தோடு அமைந்துள்ளது. ஆகவே பொதுநல வாயம் எதை மேற்கொண்டாலும் அது அதன் ஆட்சிக்குட்பட்ட மக்களின் பாதுகாப்புக்காகவே ஆகும்.

அரச அதிகாரம் முழுமையானதும் பிரிக்கப்பட முடியாததுமாகும். அரச அதிகாரத்திற்குட்பட்ட மக்கள் அதை மாற்றவோ அல்லது அதிகாரத்தைக் குறைக்கவோ முடியாது. ஏனெனில் அரச அதிகாரம் பூரணமானது. அரச பதவி பிரிக்கப்பட முடியாதது என்பது அது முடியரசாட்சி எனப் பொருள்படவில்லை. உதாரணமாக செயல்துறை சார்ந்த, அறிவுரை சார்ந்த அதிகாரத்தை தனி நபருக்கே அல்லது நபர் குழுவுக்கோ கொடுக்க முடியாது. பொது நலவாயத்தில் உள்ள அரச பதவியானது அதன் ஒரு பகுதியை அதன் மக்களுக்கு அளிக்க முடியாது . பாராளுமன்றம் தனது அதிகாரத்தை அரசின் கீழ் பிரயோகிக்கும் அரச பதவியை ஆரம்பித்தவர்கள் மக்கள் ஆகையால் அரசனால் என்ன செய்யப்படினும் அது மக்களால் எற்றுக்கொள்ளப்படவேண்டும். ஏனெனில் அவர்களே அரச பதவியை வழங்கியவர்கள். அவர்களுக்கு அரசனால் எந்த வித தீங்கும் விளைவிக்கப் படாது என நம்பப்படுகிறது. அரசனது கடமைகளுள் பொதுநலனைப் பாதுகாக்கும் நோக்கோடு இக் கோட்பாடு கற்பிக்கலாம் என்று தீர்மானிக்கப் பட்டது. பொதுநலத்தை ஆபத்துக்குள்ளாக்கும் எதையும் அரசனால் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஹொப்ஸ் இரண்டு வகையான பொதுநல வாயங்களை வேறுபடுத்தி காண்பிக்கிறார். நிறுவனத்திலான பொதுநலவாயம், கைப்படுத் துகையாலான பொதுநலவாயம். ஒவ்வொரு

[15] Stumpf, *Philosophy*, 245.

[16] Stumpf, *Philosophy,* 246.

வரும் ஒவ்வவொரு வருடமும் செய்யும் கூட்டு உடன்படிக்கை மூலம் நிறுவனத் தாலான பொதுநலவாயம் ஸ்தாபிக்கப்பட்டது. அதிகாரத்தை பலத்தால் கைப்பற்றும் போது கைப்படுத்துகையாலான பொதுநலவாயம் ஸ்தாபிக்கப்பட்டது. பின்பு கூறியது போல் மனிதன் மரணத்தைப் பற்றி பயந்து உரிமைகளையும் சுதந்திரங்களையும் கொண்ட ஒரு தனிநபரிடம் அல்லது நபர் குழுவிடம் தன்னால் ஒப்படைக்க தீர்மானிக் கும் போது ஆகும். முன்பு நடைபெறுவது மனிதர்கள் ஒருவருக்கொருவர் கொண்ட பயத்தால் மக்கள் தங்களை தெரிவு செய்யப்பட்ட அரசனிடம் ஒப்படைக்கும் போ தாகும். மனிதன் பயத்தினால் பொதுநலத்தை அடைகின்றான் ஒரு மனிதன் தன் சுய உணர்வின் அடிப்படையில் எது நல்லது, கெட்டது எனத் தீர்மானிப்பதற்கான சாதக மானது பொதுநலனில் காணப்படும் குறை களில் ஒன்றாகும். நல்லவை கெட்டவை என்பன ஒருவரின் மனச்சாட்சியைப் பொறுத்தே அளவிடப்படுகின்றன. தன் மனச்சாட்சிக்கெதிராக ஏதேனும் செய்பவர் பாவம் செய்கின்றார். இது இயற்கையான போர் சூழ்நிலையில் இடம்பெறுகின்றது. ஆனால் பொதுநலனில் நல்லது, கெட்டது என்பவற்றின் அளவீடு சிவில் சட்டம் இது பொதுமக்களின் மனச்சாட்சியாகும்.

ஓர் அரசு இருக்கும்போது அங்கு சிவில் சட்டம் ஆரம்பிக்கின்றது. சிவில் சட்டமானது அரசின் கட்டளையாக புரிந்துகொள்ளப்படு கின்றது. அரசின் அதிகாரமின்றி அங்கு எந்தவொரு சட்டமும் கிடையாது. சிவில் சட்டமானது அதன் கடைப்பிடித்தலை அனுமதித்து ஊக்குவிக்கத்தக்க அரச அதிகாரம் உள்ள போதே சட்டபூர்வமாக ஆகின்றது. “வாளின்றிய உடன்படிக்கைகள் வெறும் வார்த்தைகளே ஆகும்.”[17] சட்டமானது சட்டபூர்வமாக இருப்பதற்கு அது அரசிடம் இருந்த கட்டளைகள் தண்டனை களுடன் சேர்க்கப்படல் வேண்டும். இல்லாத விடத்து சட்டமானது மக்களிடையே எந்த வொரு தாக்கத்தையும் கொண்டிராது அத்துடன் மக்கள் சட்டத்தை கடைப்பிடிக்க மாட்டார்கள் என்பதும் வெளிப்படையாகும்.

ஹொப்ஸ் அநீதியான சட்டத்திற்குரிய சாத்தியத்தை நிராகரித்தார். நீதி, ஒழுக்கம் என்பன அரசிடமிருந்தே ஆரம்பிக்கின்றன. சட்டம் ஒரு போதும் அநீதியாக இருப்பதில்லை என்பதைக் காட்டுவதற்காக ஹொப்ஸ் இரண்டு வாக்குவாதங்களைப் பட்டியலிட்டார். முதலாவதாக, அவரைப் பொறுத்தளவில் நீதி எனப்படுவது சட்டத்திற்கு கீழ்படிதல் ஆகும். சட்டம் இருக்கும் போதுதான் அங்கு நீதிக்கான கேள்வி எழுகின்றது. அது சட்டத்தில் இருந்து தொடர்வதனால் நீதியானது சட்டத்தின் தர நிலையாக இருக்க முடியாது. இரண்டாவதாக, ஒரு பூரணத்துவமான அரசு ஒரு சட்டத்தை உருவாக்கும் போது சமூகத்திலுள்ள ஒவ் வொருவரும் இயற்கை நிலையில் தாம் மேற் கொண்ட உடன்படிக்கை ஊடாக அவற்றை உருவாக்குவதில் பங்குபற்றுகிறார்கள். இதன் விளைவாக, தனிநபர்கள் அநீதியான உடன் படிக்கையை மேற்கொள்ள முடியாது.

## நீதி பற்றிய எண்ணக்கரு

### *நீதி என்றால் என்ன?*

நீதி அத்தியாவசியமாக கொண்டுவரத் தேவையானதாக தென்படுகிறது. “நீதி பலத்தின் பிரதிநிதி. நீதிக்கும் உரிமைக்கும் இடைப்பட்ட பிளவு முரண்பாடு ஆகும்.”[18] இது எது உரிமையோ அல்லது சரியோ அதை பலமுள்ளவர்கள் செய்யும் போது நீதி இடம் பெறுகிறது என நினைப்பவர்களுக்கும் இடை யில் இடம்பெறும் குழப்பம் அல்லது பிளவு ஆகும். பல்வேறு மெய்யியலாளர்கள் இப்பிரச் சினையைப் பற்றி பேச முனைந்து இறுதியில் ஒரே விடயத்தைப் பற்றிய பல்வேறு புரிந்துணர் வுகளுக்கு வந்திருக்கின்றார்கள்.

பிளேட்டோ நீதியை “பலமிக்கவரின் ஆர்வம்”[19] என கருதுகிறார். மக்களின் ஆர்வத்துக்கான

---

[17] Copleston, *Philosophy*, 40.

[18] William Gorman (ed.), *The Great Ideas: A Syntopicon of Great Books of the Western World,* vol. 2 (Chicago: William Benton, 1952), 850. Hereafter, Gorman, *Great Ideas.*

[19] Plato, ñThe Republic,ò in *The Dialogues of Plato,* vol.1, trans. by B. Jowett (New York: Random House, 1937), 603. Hereafter, Plato, *Dialogues*.

அன்றி பலமிக்கவர்களின் ஆர்வத்துக்காக பல்வேறு அமைப்பான அரசாங்கங்கள் சட்டங் களை உருவாக்குவதில் இருந்து இது வெளிப்படையாகின்றது. இவர்களைப் பொறுத்தளவில் நீதியானது பலமிக்கவர் களால் உருவாக்கப்படும் சட்டங்களிற்கு மக்கள் கீழ்ப்படிய வேண்டும் என்பதாகும். இச்சட்டங்களை மீறுபவர்கள் யாராயினும் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். இப்புரிந் துணர்வில் நீதியானது இரண்டு விடயங் களைக் குறிக்கின்றது."ஒரு வலுப்பெற்ற ஒருவன் பலவீனமானவர்களிடமிருந்து தங்கள் நலன்களுக்கு சேவை செய்யும் உரிமையுடையவனாக இருப்பான்."[20] ஆனால் ஒரு வலுப்பெற்ற ஒருவன் அநியாயம் செய்ய முடியாது. "ஒரு மென்மை யானவன் அநியாயம் செய்ய முடியும். ஆனால் அவற்றில் பாதிப்படைவதில்லை."[21] மென்மையானவன் நேர்மையையும் சமாதா னத்தையும் பின்பற்ற மாட்டான். நேர்மை யாக உள்ளவன் நிறையக் கஷ்டங்களை எதிர் நோக்குவான். ஆனால் மென்மையா னவன் அவ்வாறு எதிர் நோக்கமாட்டான் என்று ஹொப்ஸ் கூறுகிறார்.

நீதியாக உள்ளவன் தன்னைத்தான் அடக்கிக் கொள்ளப்பாடுபடுவான். சிவில் நடவடிக்கைக்காகப் பாடுபடுவான். மெய்யிய லாளர்கள் எப்போதும் நீதியைப் பற்றி விளங்கிக் கொள்வதில் எதிராக காணப் படுவர். பிளேட்டோவின் நீதித்துவம் கொள்கை போன்றது. "நீதித்தவம் இல்லாத வனை விட சாதாரண மனிதன் மேம்பட்ட வனாவான்'.[22] நீதித்துவம் இல்லாதவன் செய்கின்ற செயல்கள் யாவும் பிறரை காயப்படுத்தும் விதத்தில் அமையும். இதனால் பிளேட்டோ கூறுவதாவது "மனிதனை மனிதன் காயப்படுத்தாமல் ஒற்றுமையாக வாழ்வதற்கு காரணியாக அமைவது நீதித்துவமாகும்."[23] இச் சமாதானத் துவத்தினால் மனிதனுக்கு பல்வேறுபட்ட படிப்பினைகள் கிடைக்கின்றன.

அரிஸ்ரோட்டில் சமாதானம் என்பது ஒருவருக் கொருவர் ஒற்றுமையாக வாழ்வதாகும். இது அரசியல் சமூகத்தின் அடிப்படை மூலாதார மாகும். அரசியல் ரீதியாக வரும் சண்டை களை ஒற்றுமை மூலம் காட்ட வேண்டும். அரசியலில் மிருகத்தனமாக காணப்படுப வனுக்கு எந்தவொரு சிறப்பும் கிடையாது. "அவன் மனிதாபிமானம் உள்ளவன் என்றாலும் சரி இல்லாதவன் என்றாலும் சரி."[24] சட்டம், நீதி போன்றவற்றிலிருந்து பிரிந்த மனிதன் மிருகத்தைவிட மோசமானவன். சமாதானத்தின் மூலமாக நாம் எமக்கு அருகில் உள்ளவர்களு டன் ஒற்றுமையாக வாழலாம். நாம் நேர்மை யாக இருப்பதுதான் எமது கடமையை எமக்கு செய்ய உணர்த்துகின்றது.

சென் தோமஸ் அக்குவைனாஸ் நீதி பற்றி கூறும்போது "புத்திசாலியானவன் நாம் எப்போதும் நேர்மையாக இருப்பதையே விரும் புவான் அதை பழக்கமாகவும் கொள்வான்."[25] மேலே குறிப்பிட்டதில் ஏதாவது ஒரு கொள்கை இல்லதவன் நேர்மையாக இருக்கமாட்டான். நீதி ஒரு மனிதரிலிருந்து இன்னொரு மனிதருக் கிடையே உறவு பலம் வாய்ந்ததாக காணப் படும். இது மனிதருக்கிடையே சமத்துவத்தைத் ஏற்படுத்தும்.

அரசியல் நிறுவனமாக திரும்புகையில் நீதியானது பின்வரும் மாற்றீடுகளை செய்ய முடியும் "ஒன்றில் நீதிக் கோட்பாட்டை அரசு முன்னுதாரணமாக கொள்ள வேண்டும் அல்லது எது நீதியானது எது நீதியற்றது என்ற உறவுகளை அரசியல் அமைப்பு ரீதியான உறுதிப்பாட்டுடன் கொண்டுவர வேண்டும்."[26] இதில் இரண்டாவது தேர்வில் மட்டும் தான்

---

[20] Gorman, *Great Ideas*, 851.

[21] Gorman, *Great Ideas*, 851.

[22] Hobbes, *Leviathan*, 113.

[23] Plato, *Dialogue*s, 618.

[24] Aristotle, ñPolitics,ò in *The Basic Works of Aristotle*, ed. by Richard McKeon (New York: Random House, 1941), 1129. Hereafter, Aristotle, *Basic Works*.

[25] Thomas Aquinas, *Summa Theologiae*, I Iae, Q. 58, Art. 1 trans. by Fathers of English Dominican Province (New York: Benziger Brothers, Inc., 1946), 1436. Hereafter, Aquinas *Summa*. I Iae.

[26] Gorman, *Great Ideas*, 851.

நீதி அல்லது நீதியற்ற விடயங்களைத் தீர்மானிக்கமுடியும். ஏனெனில் இதில் எது நீதியானது எது நீதியற்றது என்பதை அரசு தீர்மானிக்க முடியாது. இதில் முதல் தேர்வை எடுத்துக்கொண்டால் குடிமக்கள் சட்டத்தை மதிப்பதை நடத்தையின் ஒருபகுதியாகக் கொள்வர்.

எப்படியாயினும் நீதி பற்றி எல்லா மெய்யிய லாளர்களிடையே வேறுபாடுகள் இருந்த போதும் ஒரே விடயங்களை அவர்கள் குறிப்பிட்டனர் நீதி ஒரு மனிதனிலிருந்து இன்னொரு மனிதனுக்கிடையே தொடர்பை ஏற்படுத்துகின்றது. இதனால் மட்டும் தான் அயலவர்களுக்கு நன்மை செய்ய முடியும். சமூகத்தில் எவ்வாறு மகிழ்ச்சியாக வாழலாம் என்பதை குறிப்பிடுகின்றது. நீதி எமது கடமை என்பதைக் காட்டுகின்றது. அரசியல் ஈடுபாட்டில் உள்ளவர்களிடம் பெரும்பாலும் நீதியைக் காணமுடியாது. சில நேரங்களில் அரசாங்கமானது நல்ல மனிதர்களையும் தண்டிக்கும். எவ்வாறாயினும் நீதியானது மனிதனை ஒற்றுமையாக வாழவைக்கிறது. சமூகத்துடன் இன்பமாக வாழ வழிவகுக் கின்றது. நீதியானது எமது கடமையை எமக்கு உணர வைக்கின்றது. நீதி இரண்டு வடிவங்களில் தன்னை வெளிப்படுத்து கின்றது.

அ. இயற்கை நீதி
ஆ. மனிதனால் உருவாக்கப்பட்ட நீதி

## இயற்கை நீதி

இயற்கை நீதி என்பதன் மூலமாக மெய்யிய லாளர்கள் பல இன்னல்களை எதிர்நோக்கு கின்றார்கள். நீதித்துவம் இயற்கை மூலமாகவே உருவாக்கப்பட்டது என சிலர் கருதுகின்றனர். மனிதனது தேவைகளுக்கு ஏற்றவாறே நீதித்துவம் உருவாக்கப்பட்டது. சிலர் இயற்கையாக உருவாக்கப்பட்ட நீதித்துவத்தில் மாற்றம் ஏற்படமாட்டாது என்றும். இன்னும் சிலர் இயற்கையாக உருவாக்கப்பட்ட நீதித்துவம் மாற்றங்களுக் குள்ளாகும் என தெரிவித்தனர்.

இதன் பிரகாரம் மெய்யியலாளர்கள் நீதித்துவம் தொடர்பாக கூறுவது என்னவென்றால் அரிஸ் ரோட்டில் மற்றும் சென்தோமஸ் அக்கு வைனாஸ் இவர்கள் இருவரும் இயற்கை நீதித்துவத்தை ஏற்றுக்கொண்ட போதிலும் இயற்கை நீதி மாற்றக் கூடியதா அல்லது மாற்ற முடியாததா என்பதில் அவர்களிடையே சில வேறுபாடுகள் இருந்தன. அரிஸ்ரோட்டில் நீதி ஒரளவு இயற்கையாலும் ஒரளவு சட்டத்தினாலும் உருவாக்கப்படுகிறது என்றார். இயற்கை நீதி ஒன்றே ஆகும் இது எல்லா இடத்திலும் ஒரே அந்தஸ்தைக் கொண்டிருக் கும் அவ்வாறே மனிதனுக்கு முந்திய பிரதிபலிப்பாகும் மாற்றங்களுக்குள்ளாகும் என தெரிவித்தனர்.

இயற்கைச் சட்டத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக இயற்கை நீதி உள்ளது என அக்குவைனாஸ் கருதினார். அவர் தனது முதல் போதனையாக இயற்கைச் சட்டத் தினைச் சுட்டிக்காட்டினார். “நல்லது செய் யப்பட வேண்டும் மற்றும் தீமை தடுக்கப்பட வேண்டும்.”[27] முதலாவதாக மனித வாழ்க் கையை பாதுகாக்கும் நோக்கில் நன்மையை நோக்கி மனிதனின் ஆசை முதலாவதாக இருக்க வேண்டும் என்றார். கடவுள் பற்றிய உண்மையை அறிந்துகொள்ள மனிதன் இயல்பாகவே விருப்பத்தைக் கொண்டுள்ள பின்னர் சமூகத்தில் வாழக்கூடிய அந்தஸ் தையும் பெறுவான்.

அக்குவைனாஸ் அபிப்ராயப்படி நீதியின் மூலம் இயற்கையில் உள்ளதுடன் பகுத்தறிவின் விதிப்படி அது செயற்படுகின்றது என்றார். “இயற்கையிலிருந்து உருவான நீதி சமூக மரபுகளின் அங்கீகாரத்தைப் பெற்றது. பயம் மூலம் ஒப்புதல் பெற்றது. சட்டத்தின் மூலம் மதிப்பளிக்கப்பட்டன.”[28] பகுத்தறிவின் பயன் பாட்டில் இருந்துதான் ஏனைய நடத்தைகள் உருவாகின. ஆனால் இயற்கைச் சட்டம் ஒரு போதும் மனிதனை வேறுபடுத்திப் பார்ப் பதில்லை. அது ஒரு போதும் மனிதனை அடிமைப்படுத்துவதில்லை. இயற்கையின் விளைவாக வருகிற யுத்தத்தில் மனிதனுக்கு மனிதன் எதிரியாகவும், நீதித்துவமற்ற ஒரு கடினமான வாழ்க்கையையும் வாழ்ந்து வந்தான்.

[27] Aquinas, *Summa*, I Iae, Q. 94, Art. 2, 1009.

[28] Tullyö *Rhetoric* cited in Aquinas, *Summa*, I Iae, Q. 91 Art. 3, 997.

ஆனால் ஹொப்ஸ் எதிரான கருத்தைக் கொண்டிருந்தார். இவரது அபிப்பிராயப்படி "இயற்கைச் சட்டத்தின் பொது விதிஇ போதனை போன்றன பகுத்தறிவின் மூலம் கண்டுகொள்ளப்பட்டது. இதன்மூலம் ஒரு மனிதன் தன்வாழ்கையை அழிக்க தடையை ஏற்படுத்தியது."[29] இயற்கையில் நீதி அல்லது அநீதி இரண்டுமே உள்ளன என ஹொப்ஸ் கூறினார். எங்கு அதிகாரமும் சட்டமும் உள்ளதோ அங்கு நீதி உருவாகும். ஆனால் இயற்கையில் மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள் மற்றும் மற்றவர்களை கட்டாயப்படுத்தி அடிபணிய வைக்க எந்த சட்டமும் கிடையாது. எனவே இயற்கை நிலையுள்ள ஒவ்வொரு மனிதர்களுக் கிடையிலும் ஏற்படும் போர் நீதியின் வேறு பட்ட தன்மையினால் ஆகும்.

## மனிதனால் உருவாக்கப்பட்ட நீதித்துவம்

"மனிதனின் இயந்திர வாழ்க்கையைக் கருத்திற்கொண்டு தான் இச்சட்டம் உருவாக்கப்பட்டது."[30] ஏற்கனவே உள்ள சட்டத்தின் நோக்கம் நீதித்துறை செயல் முறை மூலம் ஏற்கப்படும். இது நீதியை அடைவதற்காக சமூகத்தில் சேர்ந்து வாழ மக்களைக் இயலச் செய்யும் சட்டத்தை உள்ளடக்கியது. இது மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மதிப்புக்களை கொண்ட சட்டமாகும். இதன்மூலம் நீதித்துவத்தால் வெற்றி கொள்ளமுடியும். இதுவே இச் சட்டத்தின் விளைவாகும்.

மனிதனால் உருவாக்கப்பட்ட சட்டம் அரசியல் கொள்கைகளுக்கான ஒழுக்க படிப்பினையாகும் என பிளேட்டோ கூறுகிறார். இது சமத்துவத்தையும், நட்பையும் சமூகத்தில் மனிதர்களிடையே வளர்க்கிறது. இச் சமுதாயத்தில் மனிதர்கள் வாழகின்ற போது சந்தோசமான வாழ்க்கையையும், நல்ல நீதியையும் பெறுகின்றனர். தீயவர் களுடன் கூடி அவர்களுக்கிடையே ஒரு நீதித்துவத்தை உருவாக்க முடியும். மறுபுறம் "அநீதி சமூகத்தில் மக்களிடையே ஒற்றுமையின்மையையும் மோதல்களையும் ஏற்படுத்தும். இது மக்களின பொதுவான நடவடிக்கைகளைச் செய்யவிடாது."[31]

அரிஸ்ரோட்டில் நீதித்துவம் என்பது இயற்கை யைச் சார்ந்ததும் ஒழுங்குமுறையை சார்ந் ததும் என்றார். இயற்கை நீதியைப் பின்பற்று வதால் மனிதன் ஒழுங்கான நடத்தைக்குரிய வனாகவும் மாற்றமில்லாத வனாகவும் காணப் படுவான் என்றார்.

சென் தோமஸ் அக்குவைனாஸ் கூறுவதாவது இயற்கை நீதித்துவம் ஒரு இயற்கைச் சட்டமாகும். இவரின் முதல் கருத்து இயற்கை நீதித்துவம் பற்றியதாகும். இவரின் பிரதான கருத்தாக நல்லவை நடக்க வேண்டும் தீயவைகள் தடுக்கப்பட வேண்டும். மனிதன் நினைப்பது நல்லதைச் சார்ந்ததாயின் அதை முதலில் நடத்த வேண்டும். அது மனித உயிர்களைத் தீங்கு விளைவிப்பதிலிருந்து தடுக்கும். இயற்கை மூலம் மனிதன் தீர்மானிப் பது இறைவனைப் பற்றிய உண்மையாகும். அது சமூகத்தைப் பற்றிய நியதியாகும். அக்குவைனாஸ் கூறுவதாவது இயற்கை நீதித்துவத்தில் மிக முக்கியமான ஒரு பகுதி தான் இயற்கைச் சட்டம்.

ஹொப்ஸ் இதற்கு எதிரான கருத்தைக் கூறுகின்றார். இயற்கைச் சட்டம் தான் நடை முறைக்கு ஏற்றது. இதனை இவர் சில காரணங்கள் மூலம் கண்டுபிடித்துள்ளார். இயற்கையாக உருவாக்கப்பட்ட சட்டத்தை யாராலும் மாற்றமுடியாது இதுதான் நடை முறைக்கு ஏற்றது இயற்கை சட்டத்தில் நீதித்துவமும் நீதித்துவம் இல்லாமையும் காணப்படுகின்றது.

அரிஸ்ரோட்டில் கூறுகிறார், அரசு இயற்கை யின் விளைவாகவே கிடைக்கிறது. மனிதன் ஒரு அரசியல் பிராணியாவதற்கு முதற்காரணம் பேச்சுத் திறமையாகும். இவ்வாறான பேச்சுத் திறமையால் அவனுக்கு நல்லது எது?

[29] Hobbes, *Leviathan*, 103.

[30] Francis R. Aumann, ñJustice,ò in *Collier's Encyclopedia*, 13: 682-687 at 682.

[31] Plato, *Dialogues*, 618.

தீயது எது? நீதி எது? அநீதி எது? என்று வேறுபடுத்திப் பார்க்கும் திறமை உண்டு. இதன் விளைவாகத்தான் அவன் சமூகத்தோடு ஒட்டிவாழும் திறமை கொண்டுள்ளான். இவ்வாறான அரசியல் பிராணியான மனிதனை சமூகத்தை விட்டு வேறுபடுத்தி வைத்தால் அவனால் தன்னிச்சையாக வேறுபட முடியாது. மனிதன் சிறப்பானவனாக இயங்கினால் மிருகங்களை விட அவன் சிறந்தவன். மனிதனிடம் சட்டமும் நீதியும் காணப்படாவிட்டால் அவனை விட கொடுமையான மிருகம் இல்லை. இவ்வாறான கொடூரமான மனிதனாக காணப்பட்டால் சட்ட ஒழுங்கை தவறான வழியில் பயன்படுத்துவான். நீதியால் மட்டுமே சமூகத்தை ஐக்கியப்படுத்த முடியும். இது அரசியல் சமூகத்தில் ஏக கொள்கையாக இருக்க வேண்டும். அரசியல் சமூகத்தில் நல்ல வாழ்க்கை கிடைக்கும். "நல்லொழுக்கத்தையும் தீமையையும் சிந்தித்துணர்வதால் அங்கு நல்ல அரசை காணலாம் என அரிஸ்ரோட்டில் கூறுகிறார்."[32]

அக்குவைனாஸின் கருத்துப்படி மனிதனால் உருவாக்கப்பட்ட நீதித்துவம் எல்லோருக்கும் பொதுவானது. மனித நீதி சமூகத்திற்கு சமூகம் மனிதனுக்கு மனிதன் வேறுபட்டது. மனித சட்டத்திற்கும் தெய்வ சட்டத்திற்கும் வித்தியாசம் மனிதனால் உருவாக்கப்பட்ட சட்டம் சிவில் சமூகத்துக்குரியது, தெய்வீக சட்டமானது மனிதனுக்கும் கடவுளுக்கும் உரிய உறவு முறையைக் காட்டுகிறது. மனிதனும் கடவுளும் ஒரு அபூர்வமான சக்தியால் வேறுபடுகின்றனர் அது கடவுளினுடைய சாயலை ஒத்தது.[33]

ஹொப்ஸ், மனிதன் இயற்றிய நீதித்துவம் இயற்கையின் மூன்றாவது சட்டமாகும். நீதித்துவம் என்பது இருவருக்கிடையில் உள்ள பிரச்சினையை முழுமையாக தீர்த்து வைத்தலாகும். அவ்வாறல்லாமல் முரண்பட்டுக் கொண்டு செய்வது நீதியற்றது. மனிதனால் உருவாக்கப்பட்ட நீதித்துவம் என்பது மக்கள் ஒற்றுமையாக வாழ்வதற்காக உருவாக்கப்பட்ட உடன்படிக்கையாகும். மனிதனை நேர் வழியில் செலுத்த சட்டம் ஒரு கருவியாகும்[34].

## நீதியின் அர்த்தம், மெய்யியலிலுள்ள அதற்கான பிரத்தியேக அர்த்தமும்

மனிதன் வாழ்வது ஒரு இயந்திர வாழ்க்கையாகும். தனி மனிதனுக்கு உரிமை கிடைத்தால் தான் அவன் சுதந்திரமாக வாழ்கிறான். மனிதன் தனிமைப்பட்டதாலும் சுதந்திரம் பெற்றதாலும் இன்னொருவனை எதிர்நோக்க பயப்படுகிறான். இப்பயம் மனிதர்களுக்கிடையே ஒரு விரோதத் தன்மையை உண்டுபண்ணுகின்றது. இவ்விரோதமானது தொடர்ந்து கொண்டு செல்வதால் அது இறுதியில் கலவரத்தை ஏற்படுத்துகின்றது. ஒருவருக்கொருவர் சண்டை பிடித்துக் கொண்டு செல்வதால் அவர்களுடைய வாழ்க்கை அபாயகரமான நிலைக்கு தள்ளப்படுகின்றது. மனித உயிர்களை காப்பாற்றுவதற்காக உருவாக்கப்பட்டதே சமூக நிறுவனங்கள் அவர்களுடைய வாழ்க்கையை சீராகக் கொண்டு செல்ல சமூக ஒழங்கை கடைப்பிடிக்க வேண்டும். இவ்வாறு கடைப்பிடிப்பது நீதித்துவத்திற்கு ஒரு திறவுகோலாகும். "இவ்வாறு கடைப்பிடிப்பதற்கு அவர்கள் உறுதிப் பத்திரம் மூலம் உறுதி செய்து கொள்ள வேண்டும்."[35] இதற்கு முழுமையான ஒரு உறுதி மொழி எடுக்காவிட்டால் அதன் விளைவு யுத்தமாகும். சமாதானத்துவம் இல்லாத ஓர் செயற்பாட்டின் மூலம் மனிதனிடம் ஒரு ஒற்றுமை இல்லாத செயற்பாடு காணப்படும்.

ஹொப்ஸ் கருத்தில் சமாதானத்துவம் எல்லோருக்கும் பொதுவான ஒரு செல்வம். "ஒரு உடன்படிக்கையை மேற்கொள்வதில் வாயை விட வார்த்தைப் பிரயோகத்திற்கு மிக்க பலம் உண்டு."[36] இறையாண்மைக்கு கீழ்படிதல் என்பது ஹொப்ஸின் நீதியின்

---

[32] Aristotle, *Basic Works*, 1129-1130

[33] Aquinas, *Summa*, I Iae, Q. 100 Art. 2, 1038

[34] Hobbes, *Leviathan*, 113

[35] Hobbes, *Leviathan,* 113

[36] Copleston, *Philosophy*, 39

அடிப்படையாகும். ஒரு அரசில் அமைதி மற்றும் பாதுகாப்பை உறுத செய்ய ஒவ் வெருவரும் இறையாண்மைக்கு கீழ்படிதல் அவசியம் ஆகும். இறையாண்மை மக்களின் விருப்பத்தை பிரதிபலிக்கும். இறையாண் மைக்கு கீழ்படியாத முயற்சியும் அரச அங்கி காரத்தைப் பெறாது. இறையாண்மை எதைச் செய்தாலும் அந்த விடயத்தில் தடங்கள் இருக்க முடியாது. இறையாண்மைக்கு அநீதி செய்பவர்கள் தண்டிக்கப்படல் வேண்டும்.

சில மக்கள் கடவுளின் பெயரால் இறையாண் மையை மீறி நடக்கின்றனர். ஹொப்ஸ் நினைக்கின்றார் "அரசன் கடவுளின் பிரதிநிதி அவன் ஒரு போதும் மனிதனுக்கு தீங்கு நினைப்பதில்லை"[37] இவ்வாறு அரசு கடவுளுக்கு ஒப்பானவனாக இருப்பதனால் மனிதன் அரசுக்கு எதுவும் செய்ய முடியாது இவ்வாறு அவனுக்கு தீங்கு ஏதும் செய்ய நினைத்தால் அது அவர்களுக்கே தீங்காக வந்து சேரும்.

இறையாண்மைக்கு சட்டங்களை உருவாக் கும் உரிமை உண்டு. இச் சட்டங்கள் ஒவ் வெருவரினது தனித்தன்மையையும் மற்றவர் களுக்கு செய்யவேண்டிய விடயங்க ளையும் வரையரைக்குட்படுத் தியிருக்கும்[38] இதைத் தான் ஹொப்ஸ் தனியுரிமை என அழைத் தார். இறையாண்மைக்கு ஆட்சிக்கு வருவ தற்கு முன் மனிதன் எல்லா விடயங்களிலும் உரிமை பெற்று இருந்தான். இந்த நிலை தான் ஒவ்வெருவரும் மற்றவர்களுக்கு எதி ராக போர்நிலையை ஏற்படுத்த வழிவகுத் தது. இந்நிலைமை மக்கள் இறையாண் மைக்கு கீழ்படியாத நிலைமையை ஏற்படுத் தும். ஹொப்ஸின் நீதி அரசனுக்கு அதிக அதிகாரத்தைக் கொடுக்கின்றது. அவர் மனிதனை இயந்திர வகையில் கருதுகின் றார். இதனால் அவர் இறையாண்மைக்கு கீழ்படிந்து மக்கள் வாழ்வதை வலியுறுத் தினார்.

## நீதித்துவத்தின் உள்ளடக்கம்

ஹொப்ஸின் கூற்றின்படி நீதித்துவமானது இறையாண்மை மற்றும் சட்டம் போன்றவற் றினால் ஆரம்பிக்கப்பட்டது. அரசினால் சட்டங்கள் மூலமே மக்கள் தன்னிச்சையாக செயற்படுவது குறைந்து பற்பல தேவைகளை யும் விருப்பங்களையும் அரசாங்கத்திற்காக அமைத்துக் கொள்கிறார்கள். அரசன் என்ன சொல்கின்றாரோ என்ன தீர்மானங்கள் எடுக் கின்றாரோ அது ஒரு போதும் ஆட்சி மக்க ளைப் பாதிப்பதில்லை. அதேபோல் மக்களால் அரசனுக்கு தண்டனை வழங்க முடியாது. ஆனால் அரசனால் மனிதனுக்கு தண்டனை வழங்க முடியுமம்.[39]

மனித நீதி பற்றிய ஹொப்ஸ் அவர்களுடைய கருத்தின் சாதகம் அல்லது பாதகம் பற்றி பேசுவதற்கு முன்பு சென் தோமஸ் அவர்கள் அதை எவ்வாறு நடைமுறைக்கு கொண்டு வந்தார் என்றால் மனித நீதி என்பது "நீதி முன் அனைவரும் சமம்."[40] அதாவது "மனிதனை நேர்வழிப்படுத்துவதாக இருக்க வேண்டும். சட்டம் மனிதனை தவறு செய்வதில் இருந்து தடுக்க வேண்டும்"[41]. நீதி அனை வருக்கும் சமமாக இருக்க வேண்டும். மனித நீதி என்பது இந்த பிரபஞ்சத்தில் உள்ள அனைவருக்கும் சமமாக இருக்க வேண்டும் என்பதுதான் ஒட்டுமொத்த மக்களின் விருப்பம் ஆகும்.

ஹொப்ஸ் உடைய எண்ணக்கரு மனிதனை நல்லது செய்யத் தூண்டவும் இல்லை. தீமை செய்வதில் இருந்து தடுக்கவும் இல்லை. ஹொப்ஸ் சொன்ன நீதி ஆளும் வர்க்கத்திற்கு அனைத்து அதிகாரத்தையும் கொடுத்துள்ளது. மக்கள் அனைவரும் ஆளும் வர்க்கத்திற்கு கட்டுப்பட்டு நடக்கக்கூடியவர்களாகவே இருக்க வேண்டும். ஆளும் வர்க்கத்திற்கு கீழ் மக்களை கொண்டு வருவதன் மூலம் அவர் இவ்வுலகில் அமைதி நிலவச் செய்ய முடியும்

---

[37] Hobbes, *Leviathan*, 135

[38] Hobbes, *Leviathan,* 138

[39] Hobbes, *Leviathan* 36

[40] Hobbes, *Leviathan*, 26

[41] Ch. Perelman, *Justice* (New York: Random House, 1967), 7

என்று நம்பியிருந்தார். ஆனால் அவரின் கூற்றுப்படி ஆளும் வர்க்கத்தில் உள்ள வர்கள் யாரும் நல்லவர்களாக இருந்த தில்லை. அவர்கள் மக்களை அடக்கி ஆள நினைத்தனர். இதன் மூலம் நீதிக்கு முன் அனைவரும் சமம் என்ற கூற்று விட்டு விலகிச் சென்றுள்ளது. இதற்கு மேல் ஹொப்ஸ், மனித நீதி நல்லதை செய்து தீயதை தவிர்[42] என்கின்ற விதியை விட்டு விலகி நிற்கின்றார்..

## ஹொப்ஸின் மனித நீதி தொடர்பான எண்ணக்கருவின் சாதக பாதகங்கள்

ஹொப்ஸின் கூற்றுப்படி உலகில் எங்கெல் லாம் அமைதி கிடைக்கவில்லையோ அங் கெல்லாம் அமைதியை விலைகொடுத்து அடையமுடியும். மக்கள் இந்த சமூக உடன் படிக்கையை மீற ஆரம்பித்தால் ஒருவரை யொருவர் கொலை செய்ய ஆரம்பித்து விடுவர். எனவே கீழ்வருவனவற்றை ஹொப் ஸின் சாதகமான விடயங்களாக எடுத்துக் கொள்வோம்.

முதலாவது : ஹொப்ஸின் நிதிக் கூற்று சமூகத்தில் ஒரு நிர்வாகத்தை உருவாக்கி விடுகிறது. அது ஒரு தனிப்பட்ட ஆளும் நபரின் கீழ் மொத்த நாட்டையே கொண்டு வருகிறது. அவர் எது நினைத்தாலும் அதை செய்ய அவருக்கு அதிகாரம் உள்ளது. யாரும் அதை விமர்சிக்க இடம் இல்லை. ஆளும் நபரை விமர்சிக்க எந்தவொரு சந்தர்ப்பமும் கொடுக்கவில்லை. மக்கள் சமூக நட்பிணக்கத்திற்காக அவர் சொல் வதை மறுப்பு இல்லாமல் செய்து வந்தனர். இது ஆளும் வர்க்கத்தின் வேலையை இலகுவாக்கி வைக்கிறது.

இரண்டாவது : இது மக்களை அவர் சொல்வதைக் கேட்டு வாழப் பழக்கிவிடு கிறது. மக்கள் அதை ஒத்துக் கொள்ளும் போது ஹொப்ஸின் கூற்று முழுமையாகிறது மக்கள் எதிர்நோக்கும் போது அவர்களை அது போர் போன்ற அழிவுக்கு தள்ளிவிடு கிறது. இது போன்ற நடைமுறையில் அமைதியை கொண்டு வருவது மிகவும் எளிது.

மூன்றாவது : ஒரு வலுவான படையொன்றின் அவசியத்தை கொண்டு வருகிறது. அதன் மூலம் மக்களை அடக்கி அவர்களுடைய பேச்சை ஒத்துக் கொள்ளச் செய்ய வைக் கிறது. மக்களுக்கும் அரசுக்கும் உள்ள இந்த ஒரு உடன்பாடும் இந்த வலுவான படை யில்லை. இல்லையென்றால் அதிக நாள் நீடிக்க வாய்ப்பில்லை. இப்படை மக்களை அடக்கி அவர்களை அடிமைப்படுத்துவதன் மூலம் அமைதி கொண்டு வரும். இல்லை யென்றால் மக்கள் ஒருவரை ஒருவர் கொலை செய்து கொள்வார்கள்.

### பாதகங்கள்

முதலாவது : ஹொப்ஸ் உடைய நீதி பற்றிய எண்ணக்கரு மனிதனை ஒரு இயந்திரத்தின் தரத்திற்கு குறைத்து விடுகிறது. இவன் மனிதனை சிந்தனை இன்றி வேலை செய் விக்கக் கூடிய படைப்பாக கருதுகிறார். வெளிப் டையாகக் கூறும் போது அவ்வாறல்லாது மனிதன் திணிக்கப்படாது சுயமாகவே வேலை செய்யக் கூடிய ஒரு சிந்திக்கும் படைப்பு. ஒருவர் ஒரு விடயத்தை செய்யும் போது அதன் விளைவு எப்போதும் ஒரே விதமாக இருக்க வேண்டும் என்பது அவசியமல்ல. மனிதன் அதற்கு மேலானவன். அவன் அல்லது அவள் தனது புத்திக் கூர்மையைப் பயன்படுத்தி வித்தியாசமான வழிகளைப் பின்பற்றி ஒரே விடையை தீர்வை அடைந்து கொள்ள முடியும். ஹொப்ஸ் மனிதனை இயந்திரத்தின் நிலைக்கு தரம் குறைக்கும் நீதிக் கொள் கையே ஒரு தெளிவான அநீதியாகும்.

இரண்டாவது : அவரின் கொள்கை சமூகத்திலுள்ள மக்களிடையே சமத்துவத்தை அடைந்து கொள்வதிலும் தோல்வி அடைந்து விடுகிறது. மனிதன் என்றவகையில் அனைத்து மக்களும் சமமானவர்களே. மனிதர்களின் சமத்துவம் அவனின் பால் அவர்களுடைய அதிகாரம், அவர்களுடைய சொத்துக்கள் என்பவற்றைக் கொண்டு மதிப்பிட முடியாது. மனித சமத்துவம் எமது மனித இயல்புக்கு இணங்க மட்டுமே அளவிடப்பட வேண்டும் நீதி இவ்வகையான சமத்துவத்திலேயே அழுத்தப்பட முடியும். ஹொப்ஸ் கூறுவது போலல்ல.

---

[42] Hobbes, *Leviathan*, 28

ஹொப்ஸின் நீதிக்கொள்கை, விடயத்தின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகிறது. மனிதர்கள் எதனையும் செய்வதற்கு சுதந்திரம் அற்றவர்கள் ஆகின்றனர். இது பூரண சுதந்திர மனிதத்திலிருந்து வேறுபடுகின்றது மட்டுமல்ல சுதந்திர மனதில் இருந்து வேறுபடுவது போன்று தெரியும். அவர்களின் எந்த உணர்வுகளையும் வெளிப்படுத்தும் சுதந்திரமும் கிடையாது. அவ்வாறு நடந்தால் அவர்கள் சர்வதிகாரத்தால் தண்டிக்கப்படுவார்கள். இவ்வாறான சூழல் நாட்டில் அச்சத்தை ஏற்படுத்துவதுடன் தமது சொந்த நாட்டிலேயே அவர்களை அடிமைகளாக்குகின்றது.

அனைத்தையும் பார்க்கும்போது ஹொப்ஸின் நீதிக் கொள்கையானது, யுத்த பிரதேசங்களில் அமைதியையும் பாதுகாப்பையும் நடைமுறைப்படுத்த உதவ முடியும். இவ்வாறான பிரதேசங்களில் மக்கள் அபிவிருத்தி அடைவதற்கான வழிகளை எதிர்பார்ப்பதில்லை. ஆனால் அவர்களின் சமூகத்தில் சமாதானம் பாதுகாப்பு என்பவற்றிற்கே வேலை செய்கின்றனர். ஆகவே , ஹொப்ஸ் தனது நீதிக் கொள்கையில் சமாதானம், ஒழுங்கு என்பன சீர்குலைந்து காணப்படும் நாடுகளில் அவற்றைக் கொண்டு வருவதற்கான வழிகளை முன்வைக்கின்றார். ஆனால் இன்னொரு வகையில் அவரது நீதிக் கொள்கையானது சமாதானம் நிலவும் இடங்களில் எதிர்மறையான விளைவுகளையே (தாக்கங்களையே) ஏற்படுத்தும். இவ்வாறான இடங்களில் மக்கள் அபிவிருத்தி அடையும் வழிகளையே எதிர்பார்க்கின்றனர். அவர்களின் நாட்டில் சுதந்திரத்தை தடைசெய்யும் எந்தக் காரணியையும் ஒழிக்கும் முயற்சியையும் மேற்கொள்கின்றனர்.

ஹொப்ஸின் நீதியை இவ்வாறான பிரதேசங்களில் பின்பற்றுவதால் அபிவிருத்தியையோ சுதந்திரத்தையோ கொண்டுவர முடியாது. மாறாக ஒவ்வொரு மனிதருக்கும் எதிராக யுத்தம் புரியும் நிலையையே கொண்டு வரும் ஹொப்ஸ், இதற்கு தீர்வுகளை வேண்டும் என நினைக்கின்றாரோ அந்த நிலையையே தோற்றுவித்துவிடும்.

ஹொப்ஸின் நீதிக்கொள்கையானது, அவரின் மனிதப் புரிதலின் விளைவே ஆகும். அவரைப் பொறுத்த வரை மனிதன் என்பவன் பிறரில் தங்கி வாழாத தன்மையினால் அவன் ஒரு தனி மனிதனாகவே கருதப்படுகின்றான். பூமியில் உள்ள ஏனைய அங்கிகளைப் போலவே கட்டுப்படுத்தப்படுகின்றான். அவனின் தங்கிவாழாத தன்மை சுதந்திரத் தன்மையினால் மற்ற மனிதனின் பயத்துடன் இருக்கின்றான். இந்தப் பயம் ஏனைய மனிதனுக்கு எதிராக செயற்பட இட்டுச் செல்கின்றது. ஹொப்ஸைப் பொறுத்தவரை இதுதான் இயற்கைத் தன்மை. இந்த இயற்கைத் தன்மையைப் பொறுத்தவரை அனைத்து மனிதனும் சமமானவன். ஹொப்ஸின் இந்த சமத்துவத்தைப் பொறுத்தவரை ஒவ்வொரு மனிதனும் தான் விரும்புவதை செய்வதற்கு சுதந்திரமுடையவன். அத்துடன் இயற்கைத் தன்மையில் தக்கணப் பிழைப்பதற்கு பெற்றுக் கொள்ள முடிந்த அனைத்தையும் பெற்று அனுபவிப்பதற்கும் சதந்திரம் உடையவன். ஹொப்ஸின் கருத்துப்படி நீதி சாத்தியமற்றது. ஏனெனில் மனிதன் சுதந்திரமாக விடப்பட்டால் அவனுடைய தன்மை ஏனைய மனிதர்களுக்கு எதிராக சண்டை செய்யத் தூண்டும். சமூகத்தில் அவர்கள் ஒன்றாக வாழும் வகையில் இந்த சுதந்திரத்தை எவ்வாறு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது என்பது பற்றி தேடினார். சட்டமும் அதிகாரமும் இருக்கும் போது மக்கள் ஒற்றுமையாக இருக்க முடியும் என அவர் வாதிட்டார். சட்டமும் அதிகாரமும் இல்லாமல் இருந்தால் நாம் நீதியைப் பற்றிப் பேச முடியாது. அனைத்து தனிநபர்களும் தமது அனைத்து உரிமைகளையும் அந்த அதிகாரிக்கு சமர்ப்பிக்ககூடிய ஒரு சமூக உடன்படிக்கை ஊடாக மட்டுமே அதகாரத்தை நிலைநாட்ட முடியும். அந்த சமூக உடன்படிக்கையில் செய்து கொண்ட வாக்குறுதியை பேணுவதைத்தான் ஹொப்ஸ் நீதி என அழைக்கின்றார். ஹொப்ஸின் நீதிக் கொள்கை யுத்தம் நிலவும் பிரதேசங்களில் சமாதானத்தைக் கொண்டுவர முடியும். இவ்வாறான பிரதேசங்களில் மக்கள் அவர்களது எதிரிகளின் கரங்களில் இருந்து தமது உயிர்களை பாதுகாத்துக் கொள்வதில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள். இங்கு தான்

மனிதன் என்ற பெறுமானத்தை எண்ணிப் பார்க்க நேரமின்றி தன்னை தன் எதிரியிடம் இருந்து பாதுகாத்து தக்கணப் பிழைப்பதற்கு எதிரியை எவ்வாறு தோற்கடிப்பது என்பது பற்றி எண்ணுவான்.

ஹொப்ஸின் நீதிக் கொள்கை இவ்வாறு பிரயோகிக்கப்படவில்லை என்றால் மக்கள் ஒருவரையொருவர் கொன்று முடித்துவிடு வார்கள். அதன் விளைவாக சமாதானம், அன்பு, நீதி, என்பன இப்பிரதேசங்களில் ஒரு கனவாகவே அமைந்து விடும். மனிதர்கள் சமாதானமாக வாழும் பிரதேசங்களில் ஹொப்ஸின் நீதிக் கொள்கை பொருத்தப் பாடற்றது. இங்குள்ள மனிதன், தான் ஒரு சிக்கலான இயந்திரத்தை விடவும் அதிக பெறுமதி மிக்கவன் என்பதை உணர்ந் துள்ளான். அவன் உள்ளத்தினதும் உடம் பினதும் உறுதியான சேர்க்கை நீதி என ஹொப்ஸ் விபரித்தது மனித இயல்புக்கு முழுக்க முழுக்க பொருந்தமற்றது. மனிதன் தனது ஆன்மீக இயல்பின் காரணமாக காலம் அல்லது இடம் என்பற்றின் கட்டுப் பாட்டிற்கு அப்பால் செல்லக்கூடிய திறன் வாய்ந்தவன் இங்கு மனிதனின் அடிப்படைப் பண்புகளான அறிவு, விருப்பு, அன்பு, சுதந்திரம் என்பவற்றோடு இணைந்து செல்ல வேண்டியதுதான் நீதி எமது சமூகத்தில் மக்களிடையே சமத்துவம் இருக்கும்போது தான் நீதி சாத்தியமானது. இவ்வாறான நீதிதான் மக்களை ஒன்றாக்கி சட்டத்தின் முன் சமமாக ஆக்கி அவனுக்கு அல்லது அவளுக்கு உரியதைப் பெற்றுக் கொள்ளச் செய்யும். நீதி இவ்வாறாகப் புரிந்து கொள்ளப்பட்டால்தான் எமது உலகம் அமைதியாகவும் கவனமாகவும் இருக்கும்.

## உசாத்துணைகள்


Aquinas, Thomas. *Summa Theologiae* I Iae, Q. 1-119. Trans. by Fathers of English Dominican Province. New York: Benziger Brothers Inc. 1946.

Aristotle. ñPoliticsò in The Basic Works of Aristotle.Ed.by.Richard McKeon.NewYork: RandomHouse, 1941.

Aumann, Francis R. ñJusticeò in Collierþs Encyclopedia. Ed. by William D, Halsey and Louis Shores (USA: Crowell ï Collier Education Co-operation, 1969), 13: 682-687.

Copleston, Fredrick. A History of Philosophy. Vol. V. Hobbes to Hume. Westminster, Maryland: The Newman Press, 1961.

Gorman, William (ed). The Great Ideas, A Syntopicon of Great Books of the Western World.Chicago:William Benton, 1952.

Hobbes, Thomas. Leviathan. Ed. by Michael Oakeshott. London: Collier-Macmillan Ltd., 1969.

Perelman, Ch. Justice. New York: Random House. 1967.

Plato. ñThe Republicò in The Dialogues of Plato. Vol. 1. Trans. by Jowett. New York: Random House,1946.

Stout,A. K. ñHobbes, Thomas,òin the Encyclopedia of Philosophy. Vol.IV.Ed.by Paul Edwards (NewYork : Macmillan Publishing Co.Inc.& Free Press,1967), 30-45.

Stumpf, Samuel E. Socrates to Sartre. A History of Philosophy. New York: McGraw-Hill Book Company, 1966.


▲